தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
டிசம்பர் 21, 2015 இதழுடன் இணைப்பு

பாஸ்வேர்ட் திருடும் ட்ரோஜன் வைரஸ்

ஷிப்ட், ஆல்ட், கண்ட்ரோல் கீகளை கேப்ஸ் லாக் கீ போல அமைக்க

கண்ட்ரோல் பேனல் மற்றும் செட்டிங்ஸ் எதற்காக?

~ டாக்டர் பெ.சந்திர போஸ் ~

விண்டோஸ் 10 சிஸ்டத்திற்கு அனைவரும் ஒரு கால கட்டத்தில் மாறிக் கொள்ளத்தான் வேண்டும் என்பதனை, மைக்ரோசாப்ட் மறை முகமாகத் தெரிவித்து வருகிறது. மற்ற சிஸ் டங்களுக்கு சப்போர்ட் கொடுப்பதை நிறுத்தும் நாட்களுக்கான அறிவிப்பு, விண்டோஸ் 10 இறக்கிப் பயன்படுத்துவோருக்கான சலுகைகள் தருதல் எனப் பல வழிகளில், தன் வாடிக்கையா ளர்களை, விண்டோஸ் 10 பக்கம் இழுக்கிறது. இதனால், பலரும் விண்டோஸ் 10 சிஸ்டத் திற்கு மாறிவிடலாம் என்ற முடிவினை எடுத் துள்ளனர். ஆனாலும், இவர்கள் விண்டோஸ் 10 சிஸ்டம் குறித்துப் பல சந்தேகங்கள் கொண் டுள்ளனர். தினமலர் கம்ப்யூட்டர் மலர் வாசகர் களிடமிருந்து வரும் அஞ்சல்கள், கடிதங்கள், அழைப்புகள் இவற்றைத் தெரிவிக்கின்றன. இந்த கேள்விகளை வகைப்படுத்தித் தொகுத்து,

உள்ளே

ஸ்மார்ட் போன் முடக்கிய சாதனங்கள்	பக்கம் 4
அமெரிக்காவை மிஞ்சும் இந்தியா	பக்கம் 7
கண்ட்ரோல் பேனல் மற்றும் செட்டிங்ஸ் எதற்காக?	பக்கம் 8

வாசகர்களே....

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துகளை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளைக் குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2015 ஜூன் மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக்கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிடவேண்டும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 39, ஒயிட்ஸ் ரோடு, இராயப் பேட்டை, சென்னை – 600 014
computermalar@dinamalar.in

இங்கு பதில்கள் தரப்படுகின்றன.

கேள்வி: விண்டோஸ் 10 அப்கிரேட் செய்வதில், Product Key ***மற்றும்*** Digital Entitlement ***என இரு தொழில் நுட்ப சொற்களைச் சந்திக்கின்றோம். இவை எதனைக் குறிக்கின்றன? இவற்றின் பொருள் என்ன?***

பதில்: Product Key என்பது, வழக்கமாக, விண்டோஸ் இயக்கத்தினை நாம் அப்கிரேட் அல்லது உரிமம் பெறும் வகையில் மேம்படுத் தலைக் குறிக்கிறது. நீங்கள், விண்டோஸ் 10 சிஸ்டத்தின் புதிய உரிமம் ஒன்றை, விண்டோஸ் 10 விற்பனை செய்பவரிடம் வாங்கினால், அல் லது விண்டோஸ் 10 உரிமங்களை நிறைய எண் ணிக்கையில் நிறுவனங்கள், Volume Licensing agreement என்ற முறையில் பெற்றால் அல்லது, விண்டோஸ் 10 ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடன் புதிய சாதனம் ஒன்றை வாங்கினால், இன்ஸ்ட லேஷன் செயல்பாட்டினை மேற்கொள்கையில், சிஸ்டத்தை இயக்கும் போது, Product Key ஒன்றைத் தர வேண்டியதிருக்கும்.

Digital Entitlement என்பது, விண்டோஸ் 7,8, மற்றும் விண்டோஸ் 8.1 லிருந்து, விண்டோஸ் 10 சிஸ்டத்திற்கு, புதிய ப்ராடக்ட் கீ இல்லாமல் அப்கிரேட் செய்திடும் உரிமையை, மைக் ரோசாப்ட் மேலே சொல்லப்பட்ட, ஆப்பரேட்டிங் சிஸ்டங்களை அதிகார பூர்வமாகக் கட்டணம் செலுத்திப் பெற்றவர்களுக்குத் தந்துள்ளது. இந்த உரிமையே Digital Entitlement என்று சொல் லப்படுகிறது.

இந்த புதிய முறைச் செயலாக்கம், விண்டோஸ் 10 சிஸ்டத்தில், உங்கள் ஹார்ட்வேர் அமைப் புடன், ப்ராடக்ட் கீ இணைக்கப்படுகிறது. அதா வது, ஒருமுறை நீங்கள் விண்டோஸ் 10க்கு அப் கிரேட் செய்துவிட்டால், பின் அந்த ஹார்ட்வேர் அமைப்பில், ஒவ்வொருமுறை அப்கிரேட் செய் திடும்போதும், ப்ராடக்ட் கீ, உள்ளீடாகத் தர வேண்டியதில்லை.

கேள்வி: என்னுடைய ஹார்ட்வேர் அமைப்பினை, விண்டோஸ் 10 இன்ஸ்டால் செய்த பின்னர், மேம்ப டுத்த முடியுமா?

பதில்: நீங்கள் பெற்றுள்ள உரிமத்தைப் பொறுத்தது இது. விண்டோஸ் 7,8, மற்றும் 8.1 சிஸ்டத்திலிருந்து அப்கிரேட் செய்த எந்த பயனா ளருக்கும், ஒரு விண்டோஸ் டிஜிட்டல் உரிமை (digital entitlement) நேரடியாக உங்கள் சிஸ்டம் ஹார்ட்வேருக்கு (அதாவது மதர் போர்ட்) தரப் பட்டு பதியப்படும். எனவே, பின் நாளில், நாம் ஹார்ட்வேர் அப்கிரேட் செய்திட்டால், விண்டோஸ் 10க்கு, மைக்ரோசாப்ட் பணம் கேட்கும் என்பது வதந்தியாகும். எனவே, ராம் மெமரியை மாற்றினாலோ, புதிய ஹார்ட் ட்ரைவ் இணைத்தாலோ அல்லது புதிய ஜி.பி.யு. இணைத்தாலோ, எந்த சிக்கலும் இருக்காது.

கேள்வி: நான் என்னுடைய விண்டோஸ் 7/8/8.1க்கான கீயைப் பயன்படுத்தி, விண்டோஸ் 10 முழுமையாக இன்ஸ்டால் (Clean Windows 10 Install) ***செய்திட முடியுமா?***

பதில்: ஆம். விண்டோஸ் 10 பதிகை 1511 முதல், (அண்மைக் காலத்திய அப்டேட்) நீங்கள், விண்டோஸ் 10 சிஸ்டத்தினை, விண்டோஸ் 7/8/8.1 ப்ராடக்ட் கீ கொண்டு, ஆக்டிவேட் செய்திட முடியும்.

கேள்வி: நான் புதியதாக விண்டோஸ் 10 சிஸ்டம் பதிக்கப்பட்ட கம்ப்யூட்டரை வாங்கினால், எனக்கு Digital Entitlement ***உரிமை உண்டா?***

பதில்: இல்லை. இல்லவே இல்லை. அதி கார பூர்வ விண்டோஸ் 7/8/8.1 (கட்டணம் செலுத்திப் பெற்ற) உரிமம் பெற்றவர்கள், இல வசமாக அப்கிரேட் செய்து பெறும் சலுகை களும் உரிமைகளுமே Digital Entitlement என்று அழைக்கப்படுகிறது. புதியதாக விண்டோஸ் 10 உரிமம் பெறும் பயனாளர்கள், வழக்கம் போல விண்டோஸ் இயக்கத்திற்கான ப்ராடக்ட் கீயினை எப்படி இன்ஸ்டலேஷன் சமயத்தில், அந்த செயல்பாட்டின் இடையே தர வேண்டி யுள்ளதோ, அப்போது உள்ளீடு செய்திடலாம்.

கேள்வி: என்னிடம் பைரசி மூலம் பெற்ற விண்டோஸ் 7 உள்ளது. பல ஆண்டுகளாக இயக்கி வந்துள்ளேன். இது தானாக, இலவசமாக, அதிகாரப் பூர்வமான விண்டோஸ் 10 இயக்கமாக மாறிவிடுமா?

பதில்: இல்லை. உங்கள் சிஸ்டம் விண்டோஸ் 10க்கு அப்டேட் செய்யப்படும். ஆனால், உங்கள் சிஸ்டம் பைரசியாகவே கருதப்படும். சிஸ்டத்திற்கான சப்போர்ட் (அப்கிரேடிங், பாது காப்பு பைல்கள்) எதுவும் கிடைக்காது.

"தெரிந்து கொள்ளுங்கள்"

Download: ***கம்ப்யூட்டர் ஒன்றிலிருந்து நேரடியாக இன்னொரு கம்ப்யூட்டருக்குப் பைலை மாற்று வதனை டவுண்லோட் எனக் குறிப்பிடுகிறோம். இருப்பினும் இன்டர்நெட் நெட்வொர்க்கில் இணைந்துள்ள கம்ப்யூட்டரிலிருந்து ஒரு பைல் இறக்கிப் பதியப்படுவதனையே இது பெரும் பாலும் குறிக்கிறது.***

Software: ***[சாப்ட்வேர்] ஹார்ட்வேர் எனக் கூறப் படும் சாதனங்களை இயக்கும் கம்ப்யூட்டர் புரோ கிராம்கள் அல்லது புரோகிராம்களின் தொகுப்பு என இதனைக் கூறலாம். ஆப்பரேட்டிங் சிஸ்டம் புரோகிராம், சாப்ட்வேர் அப்ளிகேஷன்கள் [எம். எஸ். ஆபீஸ், கேம்ஸ் போன்றவை] ஆகிய அனைத்தும் இந்த சொல்லால் குறிப்பிடப்படும்.***

ஸ்மார்ட் போன் முடக்கிய சாதனங்கள்

~ பாரதி ~

இன்றைய தொழில் நுட்பம் வழங்கிய சாதனங்களில், ஸ்மார்ட் போன் மட்டுமே நாம் ஏற்கனவே மேற்கொண்ட வாழ்க்கையின் சில பரிமாணங்களை மாற்றிப் போட்டுள்ளது. நாம் மிக ஆர்வத்துடனும், பெருமையுடனும் பயன்படுத்திய சாதனங்களை மூலைக்கு அனுப்பிவிட்டது. இதுவரை வேறு எந்த சாதனமும் இந்த அளவிற்கு மாற்றங்களைத் தந்ததில்லை என்று சொல்லும் அளவிற்கு, ஸ்மார்ட் போன் நம் வாழ்வில் இடம் பிடித்துவிட்டது. பெரும் பாலானவர்களுக்கு, அவர்களின் அன்றாட வாழ்வின் இன்றியமையாத ஒரு சாதனமாக மாறிவிட்டது.

சமூக ஊடகங்களுடன் இதனை இணைத்துப் பார்த்தால், இதுவரை சென்ற சந்ததியினர் தக வல்களைப் பரிமாறிக் கொள்ளக் கையாண்ட வழிகளை அடியோடு புரட்டிப் போட்டது இந்த ஸ்மார்ட் போன் எனலாம். இதனை 'போன்' என அழைத்தாலும், நாம் போனாக இதனைப் பயன்படுத்துவது மிகக் குறைவுதான் எனலாம். ஸ்மார்ட் போன் பயன்பாட்டுப் பட்டியலில், அழைப்புகள் ஏற்படுத்த இதனைப் பயன்படுத்துவது இறுதியாகத்தான் உள்ளது. மற்ற செயல் பாடுகளே அதிகம் உள்ளன. எனவே, ஒரு சிலர், இதனை 'போன்' என்று சொல்வதைக் காட்டிலும், 'டேப்ளட்' அல்லது 'பேப்ளட்' என அழைக்கலாமே என்று கருத்து தெரிவிக் கின்றனர். இன்றைய பயனாளர்கள், குறிப்பாக இளைஞர்கள், இதனைப் போனாகப் பயன் படுத்தாமல், அப்ளிகேஷன்களைப் பதிந்து, அவற்றின் மூலம், குறுஞ்செய்திகளைத் தொடர்ந்து பரிமாறிக் கொண்டு, தங்கள் தக வல்கள் பரிமாற்றத்தை முடித்துக் கொள்கின் றனர். மேலும், இளவயதினர் ஆசைப்படுவது போல, ஒரே நேரத்தில், பலருடன் எளிதாக தகவல் தொடர்பு கொள்ள முடிகிறது. போனில் பேசும் போது, நம் முழு கவனத்தையும் அதில் செலுத்த வேண்டும். ஆனால், டெக்ஸ்ட் டைப் செய்து தகவல்களைப் பரிமாறும் போது, அந்த அளவிற்குக் கவனம் செலுத்த வேண்டிய தில்லை. இதனால் தான், பல வீடுகள், தங்கள் தரைவழி தொடர்பில் உள்ள தொலைபேசி தொடர்புகளை ரத்து செய்து வருகின்றனர்.

ஸ்மார்ட் போன்கள் எந்த சாதனங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டன என்று இங்கு பார்க்கலாம்.

பொருள் பார்த்து போட்டோ எடுக்கும் கேமரா

ஸ்மார்ட் போன்கள் முதலில் ஒழித்துவிட்ட சாதனம், நாம் ஏதேனும் ஒரு பொருளை அல்லது நபரை இலக்காகக் கொண்டு, பார்த்து போட்டோ எடுக்கும் Point and Shoot Camera தான். கடந்த பத்து ஆண்டுகளாகவே, இந்த கேமரா சிறிது சிறிதாக மறைந்து வந்தது. தற்போது ஸ்மார்ட் போன் வைத்துள்ள யாரும், இந்த வகை கேமராவில்

எடுக்கும் போட்டோக்களைக் காட்டிலும் மிகவும் துல்லியமாக போட்டோ எடுக்க முடிகிறது. எனவே, தனியாக கேமரா ஒன்றை யாரும் வாங்கிப் பயன்படுத்துவதில்லை. இதனை வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவதாலேயே, இதனைத் தயாரிக்கும் நிறுவனங்கள் இதில் புதிய சில வசதிகளை அறிமுகப்படுத்தி வருகின்றனர். இந்த வகை கேமராக்களில், இணையத் தொடர்பு கொள்ளும் வை பி இணைப்பினை இயக்க முடியும். நம் ஸ்மார்ட் போனையும், இந்த வகை Point and Shoot கேமராவினையும், வை பி வழியாக இணைத்து, கேமராவில் எடுத்துள்ள போட்டோக்களைப் பார்க்க முடியும். கேமராவினை தொலைவில் வைத்துவிட்டு, ஸ்மார்ட் போனில் உள்ள திரையை அழுத்துவதன் மூலம், போட்டோ எடுக்க முடியும். எடுத்த போட்டோவை, கேமராவிலிருந்து நேரடியாக, வை பி மூலம் சமூக இணைய தளங்களுக்கு அனுப்ப முடியும். இந்த வசதிகள் இருந்தால் தான், இந்த வகை கேமராக்கள் தற்போது விற்பனையாகும். இருப்பினும், இந்த வசதிகள் இருந்தாலும், சில ஆண்டுகளில் இவையும் மறைந்துதான் போகும் என கேமரா தயாரிப்பவர்கள் எண்ணுகிறார்கள்.

ஸ்மார்ட் போன்களில் போட்டோ எடுப்பது மட்டுமின்றி, அவற்றை எடிட் செய்திடும் வசதிகளும் இப்போது கிடைக்கின்றன. உடனடியாக, எடுத்த மற்றும் எடிட் செய்த போட்டோக்களை உடனே, நண்பர்களுக்கு அனுப்ப முடியும். அல்லது, க்ளவ்ட் சர்வர்களுக்கு அனுப்பி, அதன் வழியாக நண்பர்களுக்கு பகிர்ந்து கொள்ளலாம். போட்டோ மட்டுமின்றி, விடியோ பதிவினையும் ஸ்மார்ட் போன்கள் திறனுடன் மேற்கொள்வதால், ஸ்மார்ட் போன்கள் கேமராவினை ஓரங்கட்டியதில் வியப்பில்லை.

மியூசிக் பிளேயர்கள்

வாக்மேன், ஐபாட், எம்பி3 பிளேயர்கள் என ஒரு காலத்தில் நம் இளைஞர்கள் தங்கள் இடுப்பில் கட்டிக் கொண்டு, பாடல்களைக் கேட்டுக் கொண்ட காலம் எல்லாம் மலை ஏறிவிட்டது. இசை கேட்க விரும்புபவர்கள், அதற்கான பைல்களை, ஸ்மார்ட் போனில் பதிந்து, அல்லது மைக்ரோ எஸ்.டி. கார்ட்களில் பதிந்து, கேட்டு ரசிக்கின்றனர். விரும்பும் பாடல்களைக் கட்டணம் செலுத்தி, ஸ்மார்ட் போனில் டவுண்லோட் செய்து, ரசிப்பதும் இப்போது பழக்கமாகிவிட்டது. எனவே, மியூசிக் பிளேயர்கள் என தனியே ஒரு சாதனத்தைக் கொண்டு செல்வது என்பது இனி நடைமுறையில் இருக்காது.

பெர்சனல் கம்ப்யூட்டர்

தங்கள் ஸ்மார்ட் போனையே, பெர்சனல் கம்ப்யூட்டராகப் பயன்படுத்தும் பழக்கம் தற்போது மெல்ல மெல்ல பரவி வருகின்றது. இமெயில், இணைய தேடல் மற்றும் கேம்ஸ் விளையாட ஸ்மார்ட் போன்கள் பயன்படுத்தப்படுகின்றன. கம்ப்யூட்டரில் பணம் முதலீடு செய்திட முடியாதவர்கள், கூடுமான வரை, தங்கள் ஸ்மார்ட் போனையே, கம்ப்யூட்டருக்குப் பதிலாகப் பயன்படுத்துகின்றனர். வீடுகளில் வைத்து பயன்படுத்தும், ஹோம் பெர்சனல் கம்ப்யூட்டரில் இயக்கும் செயலிகள் அனைத்தையும் ஈடு செய்திடும் வகையில், ஸ்மார்ட் போன்களில் பயன்படுத்த அப்ளிகேஷன்கள் தற்போது கிடைக்கின்றன. அலுவலகங்களில் உள்ள கம்ப்யூட்டர்கள் அதிக திறன் கொண்டு பார்க்கும் வேலைகள் அனைத்தையும், ஸ்மார்ட் போனில் பார்க்க முடியாது என்றாலும், அன்றாட கம்ப்யூட்டிங் பணிகளை, நம்மால், ஸ்மார்ட் போனில் மேற்கொள்ள முடியும். எனவே, ஸ்மார்ட் போன்கள், ஓரளவிற்கு, பெர்சனல் ஹோம் கம்ப்யூட்டரை ஓரங்கட்டி விட்டன என்ற கூற்றும் உண்மையே.

"தெரிந்து கொள்ளுங்கள்"

Internet Telephony: *வழக்கமான டெலிபோன் இணைப்பில்லாமல் இன்டர்நெட் மூலம் தொலைபேசி தொடர்பு கொண்டு பேசும் முறைக்கு இந்த பெயர்.*

Mother Board: *[மதர் போர்ட்]பெர்சனல் கம்ப்யூட்டரில் இருக்கும் எலக்ட்ரானிக் சர்க்யூட் போர்ட். இதன் மூலம் தான் கம்ப்யூட்டரின் அனைத்து பாகங்களும் [மானிட்டர், கீ போர்ட், மவுஸ், பிரிண்டர் போன்றவை] இணைக்கப் பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஒன்றுக் கொன்று இணைந்து செயல்படுகின்றன.*

Hardware: *[ஹார்ட் வேர்] கம்ப்யூட்டர் சார்ந்த அனைத்து சாதனங்களும் இந்த சொல்லால் குறிப்பிடப்படுகின்றன. மதர்போர்டு, சிப், மவுஸ், கீ போர்டு, பிரிண்டர், மோடம், ரௌட்டர் என அனைத்தும் இந்த சொல்லில் அடங்கும்.*

டேப்ளட் பி.சி

பல ஆண்டுகளாக உயர்ந்து வந்த டேப்ளட் பி.சி.க்கள் விற்பனை, தற்போது, அதிகத் திறன் கொண்ட ஸ்மார்ட் போன்களால் குறைந்து வருகிறது. அதாவது, மக்கள் டேப்ளட் பி.சி.க்களை வாங்கிப் பயன்படுத்தாமல் இல்லை. அவர்கள், சிறிய அளவிலான டேப்ளட் சாதனங்களை வாங்கி, ஸ்மார்ட் போன் போலப் பயன்படுத்தி வருகின்றனர்.



ஸ்மார்ட் போனின் பரிமாணம், மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டே வந்து, தற்போது 5 அல்லது 6 அங்குல அளவிலான திரை, ஸ்மார்ட் போன்களின் ஒரு நிச்சயிக்கப்பட்ட அம்சமாக அமைந்துவிட்டது. இந்த அளவிலான திரை கொண்ட ஸ்மார்ட் போன்கள், டேப்ளட் பி.சி.க்கள் போலவே செயல்படுகின்றன. இவற்றைச் சட்டைப் பைகளில் வைத்து எடுத்துச் செல்லவும் முடியவில்லை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், கம்ப்யூட்டரில் வைத்து முன்பு விளையாடப்பட்ட விளையாட்டுகள் எல்லாம், ஸ்மார்ட் போன்களுக்கென வடிவமைக்கப்பட்டு, அதற்கான ஸ்டோர்களில் கிடைக்கின்றன.

பாஸ்வேர்ட் திருடும் ட்ரோஜன் வைரஸ்

விண்டோஸ் 10 ஆப்பரேட்டிங் சிஸ்டம் மக்களிடையே பரவலாகப் புகழ் பெறுகிறதோ இல்லையோ, வைரஸ் உருவாக்கும் ஹேக்கர்கள் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதில் இணைந்து தரப்படும் எட்ஜ் பிரவுசரை, மால்வேர் செயலிகளைத் தயாரித்து அனுப்பும் குழு ஒன்று தாக்கியுள்ளது. Dyreza அல்லது Dyre என்ற பெயர் கொண்ட ட்ரோஜன் வைரஸ் ஒன்று, விண்டோஸ் 10 சிஸ்டத்தில் இயங்கும் கம்ப்யூட்டர்களை இலக்காகக் கொண்டு அனுப்பப்பட்டு பரவி வருகிறது. Heimdal Security என்னும் நிறுவனம் தெரிவித்தபடி, இந்த வைரஸின் கூடுதல் வடிவம் ஒன்றும் வேகமாக, விண்டோஸ் 10 இயங்கும் கம்ப்யூட்டர்களைப் பற்றி வருகிறதாம்.

இந்த மால்வேர் புரோகிராம், தகவல்களைத் திருடி அனுப்புகிறது. பாதுகாப்பு தரும் சாப்ட்வேர் புரோகிராம்களை இலக்காக்கி திறன் இழக்கச் செய்கிறது. இதன் மூலம், கம்ப்யூட்டர் சிஸ்டங்களில் வேகமாக இதனால் நுழைய முடிகிறது. Heimdal Security நிறுவனத்தின் அறிக்கையின்படி, இதுவரை, 80 ஆயிரம் விண்டோஸ் 10 கம்ப்யூட்டர்களில் இந்த மால்வேர் வைரஸ் பரவி உள்ளது. Upatre என்ற டவுண்லோடிங் புரோகிராம் மூலம், இது கம்ப்யூட்டருக்குள் பரவியதும் கண்டறியப்பட்டுள்ளது.

பன்னாட்டளவில், விண்டோஸ் 10 பயன்படுத்துபவர்கள், 8% மட்டுமே என்பதால், இந்த மால்வேர் புரோகிராமினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து, அதிர்ச்சியூட்டும் தகவல்கள் இது வரை பரவவில்லை. ஆனால், விண்டோஸ் 10 சிஸ்டத்திற்கு அப்கிரேட் செய்து கொள்ளலாம் என்று திட்டமிட்டவர்களை, இது சற்று தாமதப் படுத்த வைக்கும் என்று பலரும் கருதுகின்றனர்.

அமெரிக்காவை மிஞ்சும் இந்தியா

இணையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையில், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளை அடுத்து, இந்தியா தற்போது மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்த மாதம், இந்த ஆண்டு 2015 இறுதியில், இந்த பட்டியலில், அமெரிக்காவினை மிஞ்சி, இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துவிடும் என பல ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

2015 ஆம் ஆண்டு முடிவில், இந்தியாவில் 40 கோடியே 20 லட்சம் பேர் இணையத்தைப் பயன்படுத்துபவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில், அமெரிக்காவில், இந்த எண்ணிக்கை 30 கோடியாக இருக்கும். இந்த தகவலை, இந்திய இணையம் மற்றும் மொபைல் கூட்டமைப்பு (Internet and Mobile Association of India (IAMAI)) தெரிவித்துள்ளது. IMRB International (Market research firm) அமைப்புடன் இணைந்து இந்த முடிவினை அறிவித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு இருந்ததைக் காட்டிலும், 45% கூடுதலாக, இந்தியாவில் இணையத்தினை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். தற்போதைக்கு, சீனா இந்த வகையில், 60 கோடி இணைய பயனாளர்களைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது. மேலே சொல்லப்பட்ட அறிக்கைகளில் உள்ள தகவல்கள் உண்மையாகும் பட்சத்தில், இந்தியா, இணையப் பயனாளர் வரிசையில் இரண்டாவது இடத்தை உலக அளவில் பெறும்.

மேலே சொல்லப்பட்ட அறிக்கைகளில், இன்னும் பல தகவல்கள் தரப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் தான், இந்தியாவில் இணையப்பயன்பாடு வேகமாகப் பரவி வருகிறது. ஒரு கோடி என்ற எண்ணிக்கையிலிருந்து, 10 கோடி என்ற எண்ணிக்கையைப் பெற இந்தியாவிற்குப் பத்து ஆண்டுகள் பிடித்தன. ஆனால், அடுத்த மூன்று ஆண்டுகளில், இந்தியாவின் இணைய மக்கள் தொகை, 10 கோடியிலிருந்து 20 கோடியாக உயர்ந்தது. 2014ல் இது 37.5 கோடியாக இருந்தது. விரைவில், 2015 முடியும் தறுவாயில், இது 40 கோடியைத் தாண்டியதாக இருக்கும்.

மேலும், 2015 ஆம் ஆண்டு தொடக்கத்தில், மொபைல் போன்களின் விலை கணிசமாகக் குறைந்தது. இதுவும், இணையப் பயனாளர்களின் எண்ணிக்கையை கணிசமாக உயர்த்துவதுல் காரணமாய் இருந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை, இணையப் பயனாளர்களில், ஆண்கள் பெண்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். 71% ஆண்களும், 29% பெண்களுமாக உள்ளனர். ஆண்களின் எண்ணிக்கை தொடர்ந்து 50% அதிகரித்து வருகிறது. பெண்களின் எண்ணிக்கை 46% அதிகரித்து வருகிறது.

இந்திய நகரங்களில், இணையப் பயனாளர்களில் ஆண், பெண் விகிதம் 62:38 ஆக உள்ளது. இந்தியக் கிராமங்களில், இணையம் பயன்படுத்துவோரின் வயது 18 முதல் 30க்குள்ளாக உள்ளது. சென்ற ஆண்டில் மட்டும், இணையம் பயன்படுத்துபவர்களில், வேலை எதுவும் பார்க்காமல் வீட்டில் உள்ள பெண்களின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டைக் காட்டிலும் 97% உயர்ந்துள்ளது.

இந்தியாவில் மொபைல் வழி இணையம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை, மிக வேகமாக உயர்ந்து வருகிறது. சென்ற ஆண்டு மட்டும், இந்த வகையில், 65% வளர்ச்சி ஏற்பட்டது. இதே நிலை, கிராமப்புறங்களிலும் தற்போது ஏற்பட்டு வருகிறது. தற்போது 8.7 கோடியாக உள்ள எண்ணிக்கை, அடுத்த ஆண்டு இறுதியில், 10.9 கோடியாக இருக்கும் என்று ஆய்வுத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

கண்ட்ரோல் பேனல் மற்றும் செட்டிங்ஸ் எதற்காக?

விண்டோஸ் 10 ஆப்பரேட்டிங் சிஸ்டத்தினைத் தங்கள் சிஸ்டங்களில் இன்ஸ்டால் செய்து கொண்டு பயன்படுத்தி வருபவர்களில், பெரும்பாலானவர்கள், ஏன் ஏறத்தாழ ஒரே மாதிரியான வேலை பார்க்க இடம் தர, கண்ட்ரோல் பேனல் மற்றும் செட்டிங்ஸ் என இரண்டு பிரிவுகள் உள்ளன என்று வியப்படைகிறார்கள். ஒரு சிலர் இது குறித்து குழப்பமும் அடைந்துள்ளனர். இதற்கான காரணத்தை இங்கு பார்க்கலாம்.

விண்டோஸ் 10 சிஸ்டத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட செட்டிங்ஸ் (settings) மெனுக்கள், விண்டோஸ் 8 சிஸ்டத்திலிருந்து வந்தவையாகும். ஆனால், பயனாளர்கள், தங்களுக்கு வேண்டிய செட்டிங்ஸ் அமைப்புகளை Settings விண்டோவிலேயே மேற்கொள்ளலாம். விண்டோஸ் 10 ஐப் பொருத்த வரை, இரண்டு விண்டோ திரைகளும் (Control Panel மற்றும் Settings) கிடைக்கின்றன. இவை தேவையற்று இருப்பது போல தோன்றினாலும், இதில் மேற்கொள்ளப்படக் கூடிய செயல்பாடுகளில், சிறிய வேறுபாடு இருக்கிறது.

மைக்ரோசாப்ட் டேப்ளட் பி.சி. மற்றும் பெர்சனல் கம்ப்யூட்டர் என இரண்டு வகை சாதனங்களிலும் செயல்படும் ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஒன்றை வடிவமைக்க எண்ணித் திட்டமிட்டது. டேப்ளட் பயனாளர்கள், தங்களுக்கு வேண்டிய அனைத்தையுமே, ஸ்டார்ட் ஸ்கிரீனிலிருந்து மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்த்தது. பெர்சனல் கம்ப்யூட்டர் பயனாளர்கள் இந்த செயல்பாடுகளை மேற்கொள்ள தங்கள் நேரத்தைப் பெரும்பாலும் டெஸ்க்டப் நிலையிலேயே செலவிடுவார்கள் என எண்ணியது. அதனால்,, ஒவ்வொரு நிலையும், செட்டிங்ஸ் மேற்கொள்ள அதனதன் வழியில் செயல்படுகின்றன. கண்ட்ரோல் பேனல், விண்டோஸ் 7 சிஸ்டத்தில் கிடைத்த அதே செட்டிங்ஸ் அமைப்பினை பயனாளர்களுக்குத் தருகிறது. ஆனால், அதே நேரத்தில், 'செட்டிங்ஸ்' திரை அதே அமைப்பில் சில துணைப் பிரிவுகளையும் கொண்டு, கூடுதலான சில வசதிகளையும் காட்டுகிறது. மேலும், டேப்ளட் மற்றும் தொடு உணர் திரை சாதனங்களில் இவை பயன்படுத்தப்பட வேண்டும் என்ற முதன்மையான நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டவை.

விண்டோஸ் 8 சிஸ்டத்தில் நமக்குத் தரப்படும் இடைமுக செயலியைச் (interface) சிலர், "பைத்தியக்காரத்தனமாக" தொடர்பின்றி செயல்படுகிறது என்று குற்றம் சாட்டி வந்தனர். எனவே, விண்டோஸ் 10 இடைமுகச் செயலியைச் சிறப்பான தொடர்பு உள்ளதாக

"தெரிந்து கொள்ளுங்கள்"

USB -- Universal Serial Bus: *[யுனிவர்சல் சீரியல் பஸ்] கம்ப்யூட்டருடன் இணைக்கப்படும் பிற சாதனங்களை எளிதாக இணைத்துப் பயன்படுத்த ஒரு வழி. ஸ்கேனர், மவுஸ், பிளாஷ் டிரைவ், பிரிண்டர் எனத் தற்போது அனைத்து சாதனங்களும் இதன் வழியே தான் கம்ப்யூட்டருடன் இணைக்கப்படுகின்றன. கம்ப்யூட்டர் இயங்கிக் கொண்டிருக்கும்போதே இதனைப் பயன்படுத்தி சாதனங்களை இணைக்கலாம், நீக்கலாம்.*

Control Panel: *[கண்ட்ரோல் பேனல்] விண்டோஸ் இயக்கத்தின் ஸ்டார்ட் மெனுவில் தரப்படும் ஒரு டூல் என இதனைச் சொல்லலாம். இதன் மூலம் விண்டோஸ் இயக்கத்தின் அடிப்படைச் செயல்பாடுகளை செம்மைப் படுத்தலாம். அத்துடன் பெர்சனல் கம்ப்யூட்டர் மற்றும் இணைந்த சாதனங்கள் செயல்படும் தன்மையையும் சீரமைக்கலாம்.*



அமைத்திட வேண்டும் என மைக்ரோசாப்ட் எண்ணியது. அது, டேப்ளட் பி.சி. மட்டுமின்றி, பெர்சனல் கம்ப்யூட்டரிலும் மற்ற மொபைல் சாதனங்களிலும் அவ்வகையில் செயல்பட வேண்டும் எனத் திட்டமிட்டது.

தொடக்கத்தில், மைக்ரோசாப்ட், கண்ட்ரோல் பேனல் மற்றும் செட்டிங்ஸ் என்ற இரண்டு பிரிவுகளையும் நீக்கிவிட்டு, ஒரே இடத்தைத் தர எண்ணியது. இந்த ஒரே இடத்தில், பயனாளர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து அமைப்பு மாற்றங்களையும் மேற்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும் எனவும் திட்டமிட்டது. ஆனால், இறுதியில், மைக்ரோசாப்ட் இரண்டு பிரிவுகளிலும், பயனாளர்கள் தங்களுக்கு வேண்டிய அமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும் வகையில் வடிவமைத்துத் தந்துள்ளது.

விண்டோஸ் 10 செட்டிங்ஸ் விண்டோ, தொடு உணர் திரையினை முதன்மை நோக்க மாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. விண் 10 ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் கிடைக்கும் அனைத்து செயல் வடிவமைப்பு மாற்றங்களையும் இதில் மேற்கொள்ளலாம். அதே நேரத்தில், கண்ட்ரோல் பேனல் பிரிவும் தரப்பட்டுள்ளது. ஆனால், பயன்களைப் பொறுத்த வரை, அது தரும் செயல் வடிவமைப்பு மாற்றங்களுக்கான இடங்களைப் பொறுத்தவரை சற்றுக் குறைவாகவே இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும், முந்தைய ஆப்பரேட்டிங் சிஸ்டங்களில் கிடைத்த வசதிகளை அமைத்துப் பயன்படுத்தும் வகையிலேயே உள்ளது. ஒரு சிலர், கண்ட்ரோல் பேனலில் கிடைக்கும் செயல் வடிவமைப்பு புகளிலேயே, தங்களுக்குத் தேவையானதை மேற்கொண்டு செயல்பட்டாலும், பயனாளர்கள் பெரும்பாலும் பயன்படுத்தும் வடிவமைப்பு வழிகள் "செட்டிங்ஸ்" விண்டோவில் தான் கிடைக்கின்றன.

"தெரிந்து கொள்ளுங்கள்"

Taskbar: *[டாஸ்க் பார்] விண்டோஸ் இயக்கத்தில் மானிட்டர் திரையில் கீழாக இயங்கும் நீள் கட்டம். இதில் ஸ்டார்ட் மெனு, விரைவாக அப்ளிகேஷன் புரோகிராம்களை இயக்க ஐகான்கள் அடங்கிய தொகுப்பு, இயங்கிக் கொண்டிருக்கும் அப்ளிகேஷன் புரோகிராம்களின் பைல்களுக்கான கட்டங்கள் மற்றும் கடிகாரம், பின்னணியில் இயங்கிக் கொண்டிருக்கும் புரோகிராம்களின் ஐகான்கள் ஆகியவை இருக்கும். இவற்றைத் தேவைப்படும் போது கிளிக் செய்து பெறலாம்.*

Back up Domain Controller: *விண்டோஸ் நெட்வொர்க்கில் இணைக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கம்ப்யூட்டர்கள் பிரைமரி டொமைன் கண்ட்ரோலரின் பேக் அப் ஆகச் செயல்படுவதனை இது குறிக்கிறது. அவை செயல் இழக்கையில் இந்த பேக் அப் டொமைன் கண்ட்ரோலர்கள் அதன் செயல்பாட்டினை மேற்கொள்கின்றன. இவை செக்யூரிட்டி சார்ந்த செயல்பாடுகளையும் மேற்கொள்ளும் வகையில் செட் செய்யப்பட்டிருக்கும்.*

52% இந்தியர்கள் குறைந்த நேரமே இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்

அண்மையில், எரிக்சன் நிறுவனத்தின், நுகர்வோர் சோதனை மையம், இந்தியாவில் இணையம் பயன்படுத்துவோரிடையே ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அதில், இணையம் பயன்படுத்துபவர்கள், எவ்வளவு நேரம் அதில் செலவிடுகின்றனர் என்று கணக்கிட்டது. ஆய்வின் முடிவில், இணையத்தைப் பயன்படுத்தும் மொத்த நபர்களில், 52% பேர், மிகக் குறைந்த நேரமே, இணையத்தில் செலவிடுகின்றனர் என்பதைக் கண்டறிந்தது. இவர்கள் அனைவரும், தங்களை எந்த வலைப் பின்னலிலும் சேர்த்துக் கொள்ளாமல், (un-networked group) தனி நபர்களாகவே, இணையத்தை அணுகுகின்றனர். இவர்களில் ஐந்தில் ஒருவர் தான், இணையத்தைப் பயன்படுத்துகிறார். அவரும், வாரம் ஒருமுறையே பயன்படுத்துகிறார்.

உலக அளவில், இது போல, எந்த வலைப் பின்னலிலும் உறுப்பினர் ஆகாமல், தனியே இணையத்தைப் பயன்படுத்துவோர், 18% பேர் உள்ளனர். இவர்களிலும் பெண்களே அதிகம் உள்ளனர். இவர்களின் வயது 40 முதல் 59 வரை உள்ளது. இவர்களிடம் உள்ள சாதனத்தின் எண்ணிக்கையும் ஒன்றே ஒன்றுதான்.

ஆனால், இந்தியாவில் தனி நபர்களாக இணையத்தைப் பயன்படுத்துவோர், நண்பர்கள் மற்றும் உறவினர்களைக் காட்டிலும், இணையம் வழி தங்களுக்கு வேண்டியதைப் பெறுவது எளிது எனத் தெரிவித்துள்ளனர்.

பன்னாட்டளவில், 82% பேர் ஏதேனும் ஒரு வலைப்பின்னலில் தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். ஆனால், இந்தியாவில் இத்தகையோர் 48% மட்டுமே உள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது. (http://www.dnaindia.com/topic/netizens)

இந்த ஆய்வினை, எரிக்சன் நிறுவனம், 45,290 பேரை நேரடியாகப் பேட்டி கண்டு எடுத்துள்ளது. இவர்களின் வயது வரம்பு 15 முதல் 69 ஆக இருந்தது. இணையம் பயன்படுத்தும் 120 கோடி மக்களின் பிரதிபலிக்கும் வகையில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இந்தியா உட்பட, 24 நாடுகளில் இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இணைய வலைப்பின்னலில் இருந்து கொண்டு இணையத்தைப் பயன்படுத்துவோர், சராசரியாக, மூன்று சாதனங்களைக் கொண்டு, அவற்றைப் பயன்படுத்தி, இணையத்தை அணுகுகின்றனர். நாளொன்றுக்கு சராசரியாகக் குறைந்தது ஒரு மணி நேரம் பயன்படுத்துகின்றனர். இணையம் பயன்படுத்தத் தங்கள் சொந்த சாதனங்களுடன், ஏழு சாதனங்களை நம்பி உள்ளனர்.

இந்த 24 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கலந்து கொண்டவர்களில், 43% பேர், இணையம் தங்கள் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவது தொடர்ந்து உயர்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதில் 41% பேர், தொழில் நுட்பமானது, உலகில் பலரின் நட்பினைப் பெற்றுத் தந்துள்ளதாகக் கூறியுள்ளனர். உலக அளவில் ஏற்படும் வளர்ச்சியினை அறிந்து உணர முடிகிறது. நாட்டின் எல்லைகள் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். 31% பேர், கடந்த ஐந்து ஆண்டுகளில், இணையத்தின் காரணமாக, தங்களின் பொருட்கள் வாங்கும் பழக்கத்தில் பெருத்த மாறுதல் ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். பெரும்பாலான பொருட்களை இணையம் வழியாகவே வாங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஷிப்ட், ஆல்ட், கண்ட்ரோல் கீகளை கேப்ஸ் லாக் கீ போல அமைக்க

விண்டோஸ் சிஸ்டத்தில் டாகிள் கீ (Toggle Key) என ஒரு பயன்பாடு உள்ளது. கீ ஒன்றை அழுத்திவிட்டால், தொடர்ந்து ஒரு பயன்பாடும், மீண்டும் அதனை அழுத்தினால், முன்பிருந்த பயன்பாடும் கிடைக்கும். எடுத்துக் காட்டாக, கேப்ஸ் லாக் கீயினைச் சொல்லலாம். இதனை ஒருமுறை அழுத்திவிட்டால், தொடர்ந்து ஆங்கிலத்தில் பெரிய எழுத்துகளாகவே கிடைக்கும். மீண்டும் அழுத்தி விட்டால், வழக்கம் போல சிறிய எழுத்துகள் கிடைக்கும். குறிப்பிட்டபடி செட் செய்தால், இதனை அழுத்தும் போதும், நீக்கும் போதும், வேறுபாடான ஒலி எழுப்பி, சிஸ்டம் நம்மை எச்சரிக்கும்.

ஒரு சிலர், ஏன் இதனை மற்ற கீகளிலும் செயல்படும்படி செய்யக் கூடாது. குறிப்பாக, ஷிப்ட், ஆல்ட் மற்றும் கண்ட்ரோல் கீகளை அமைக்க முடியுமா? என்று கேட்கின்றனர். இந்த கீகளை இவ்வாறு அமைப்பது, சீரான பயன்பாட்டினைத் தரும் செயலாக இருக்க முடியாது. இருப்பினும், எப்படி இவற்றை டாகிள் கீகளாக அமைக்க முடியும் எனப் பார்க்கலாம்.

விண்டோஸ் அமைப்பில் ஸ்டிக்கி கீ (Sticky Keys) என்று ஒரு அமைப்பு உண்டு. இதனை இயக்கித்தான் கீ பயன்பாட்டினை டாகிள் கீயாக அமைக்கலாம்.

ஸ்டிக்கி கீ பயன்பாட்டினை எப்படி செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது எனப் பார்க்கலாம். முதலில் கண்ட்ரோல் பேனலைத் திறக்கவும். இது Classic View வில் இருப்பதை உறுதி செய்து கொண்டு, அனைத்து கண்ட்ரோல் பேனல் ஐகான்களும் காட்டப்படுகின்றனவா என்று பார்க்கவும். இந்த வியூவில் இல்லை என்றால், கண்ட்ரோல் பேனலின் இடது பக்கப் பிரிவில் சென்று, Switch to Classic View என்ற டேப்பினை அழுத்தி, இந்த வியூவிற்குக் கொண்டு வரவும்.

அடுத்து Accessibility என்பதனைத் திறக்கவும். இப்போது Accessibility ஆப்ஷன்ஸ் என்ற டயலாக் பாக்ஸ் திறக்கப்படும். இனி கீ போர்ட் டேப்பில் அழுத்தி, Use Sticky Keyss என்ற செக் பாக்ஸினைத் தேர்ந்தெடுக்கவும்.

அடுத்து Settings. என்ற இடம் பெற S என்பதனை அழுத்தவும். ஸ்டிக்கி கீ டயலாக் பாக்ஸ் திறக்கப்படும். அந்த டயலாக் பாக்ஸில் கீழ்க் கண்ட வசதிகள் தரப்பட்டிருக்கும்.

Use shortcut செக் பாக்ஸ் கிடைக்க U அழுத்தவும். இதனை அழுத்திவிட்டால், ஷிப்ட் கீயை ஐந்து முறை அழுத்தி, ஸ்டிக்கி கீஸ் இயக்கத்தினைத் தொடங்கவும் நிறுத்தவும் இயலும்.

P அழுத்தினால், Press modifier key யை இரு முறை அழுத்த செக் பாக்ஸ் லாக் செய்யப்படும். இதன் மூலம், செயல்பாட்டினை மாற்றும் கீயை (Shift, Ctrl, Alt, orWin) நாம் லாக் செய்திட முடியும். இந்த கீகளை இருமுறை தொடர்ந்து அழுத்துவதன் மூலம் இந்த செயல்பாடு நடைமுறைக்கு வரும்.

T கீ அழுத்தினால், Turn Sticky Keys off if two keys are pressed at once செக் பாக்ஸ் தேர்ந்தெடுக்கப்படும். இதன் மூலம், ஸ்டிக்கி கீகளின் இயக்கத்தினை நிறுத்த முடியும். மாற்று பயன்பாடு தரும் கீகளான Shift, Ctrl, Alt, அல்லது Win key கீகளில் ஒன்றுடன், இன்னொரு கீயுடன் சேர்த்து அழுத்துகையில், ஸ்டிக்கி கீ இயக்கம் நிறுத்தப்படும்.

M கீ அழுத்த, Make sounds when modifier key is pressed என்ற செக் பாக்ஸ் தேர்ந்தெடுக்கப்படும். மாற்று செயல்பாட்டினைத் தரும் மாடிபையர் கீ, (Shift, Ctrl, Alt, அல்லது Win key கீ) இயக்கத்தைத் தொடங்கவோ, அல்லது நிறுத்தவோ அழுத்தப்படுகையில், ஒலி ஒன்று எழுப்பப்படும். தொடங்கும்போது ஒரு வகை ஒலியும், செயல்பாடு நீக்கப்படும்போது இன்னொரு வகை ஒலியும் எழுப்பப்படும்.

S என்ற கீ அழுத்த, Show Sticky Keys status on screen என்ற செக் பாக்ஸ் தேர்ந்தெடுக்கப்படும். ஸ்டிக்கி கீ செயல்பாடு இயக்கத்தில் இருக்கையில், ஸ்டிக்கி கீஸ் ஐகான் டாஸ்க் பாரில் காட்டப்படும்.

Microsoft Office வேர்ட் டிப்ஸ்...

செவ்வக வடிவில் டெக்ஸ்ட் செலக்ஷன்

வேர்ட் புரோகிராமில், சிலவகை டேட்டா வினைப் பயன்படுத்துகையில், குறிப்பாக டேபிள்களை அதிகம் பயன்படுத்துகையில், தொடர்ந்து அமையாமல், ஆங்காங்கே உள்ள டேட்டாவினை தனித்தனியே தேர்ந்தெடுக்க வேண்டியதிருக்கும். எடுத்துக் காட்டாக, ஐந்து வரிகளில், பத்தாவது கேரக்டர் முதல் பதின்மூன் றாவது கேரக்டர் வரை தேர்ந்தெடுக்க வேண் டியதிருக்கலாம். மற்றவற்றை விட்டுவிட்டு, இதனைத் தேர்ந்தெடுக்க வேண்டியதிருக்கலாம். அப்போது கீ போர்ட் மூலம், குறிப்பிட்ட டெக்ஸ்ட்டை, டேட்டாவினை எப்படி தேர்ந்தெ டுப்பது எனக் காணலாம்.

1. நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்பும் டெக்ஸ்ட் பகுதியின், இடது மேல் மூலையில் கர்சரைக் கொண்டு சென்று வைக்கவும்.
2. அடுத்து Ctrl+Shift+F8 அழுத்தவும். பின்னர், அப்படியே நீங்கள் எந்த கேரக்டர் வரை கர்சரை நீட்ட வேண்டுமோ, அது வரை கொண்டு சென்று, அப்படியே கீழே இழுக் கவும். இதற்கு மவுஸைக் கூட நீங்கள் பயன் படுத்தலாம். டெக்ஸ்ட் தேர்ந்தெடுக்கையில், Alt கீ அழுத்திக் கொண்டு தேர்ந்தெடுக்கலாம்.
3. தேர்ந்தெடுத்து முடித்த பின்னர், வழக்கம் போல, நீங்கள் தேர்ந்தெடுத்த டெக்ஸ்ட்டினை என்ன என்ன மாற்றங்களுக்கு உட்படுத்து வீர்களோ, அவ்வளவும் பயன்படுத்தலாம். காப்பி செய்திடலாம். பேஸ்ட் செய்திடலாம். இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல் லலாம். நீக்கலாம்.

வெவ்வேறு அளவில் டேபிள் செல் அமைப்பு

வேர்ட் புரோகிராம், அதன் டாகுமெண்ட்களில் டேபிள்களை உருவாக்குவதை மிக எளிமையான ஒரு செயலாகத் தந்துள்ளது. ஆனால், அதில் செல்களை நாம் விரும்பிய வகையில் அமைப்பது, சற்று சுற்றி வளைத்துச் செயல்படும் வேலையாக உள்ளது. எடுத்துக் காட்டாக, டேபிள் ஒன்றின் முதல் இரு செல்கள் ஒரு குறிப்பிட்ட அளவில் அதிக அகலத்திலும், மற்ற பத்து செல்கள் குறைவாக சமமான அளவில் வேண்டும் என்றால் என்ன செய்திடலாம்? வேர்ட் தானாக இதனை அமைக்காது. அதன் மாறா நிலையில், குறிப்பிட்ட அளவில் அனைத்து செல்களையும் அமைத்துவிடும். எனவே, மேலே கூறியபடி அகலத்துடன் 12 செல்கள் கொண்ட டேபிள் ஒன்றை அமைக்க, ஒரு சுருக்கமான வழியைப் பார்ப்போம்.

1. மூன்று செல்கள் கொண்ட ஒரு வரிசை டேபிள் ஒன்றை உருவாக்கவும். இது உங்கள் டாகுமெண்ட்டின் ஒரு மார்ஜின் முனையிலிருந்து அடுத்த மார்ஜின் வரை நீட்டிக்கப்பட்டு கிடைக்கும்.
2. அடுத்து மவுஸைப் பயன்படுத்தி, முதல் இரண்டு செல்களின் அகலத்தினை நீங்களே சரி செய்திடுங்கள். எவ்வளவு அதிக அகலம் வேண்டுமோ, அவ்வளவு அகலத்தில் அமைத்திடுங்கள்.
3. மவுஸின் கர்சரை மூன்றாவது செல்லில் நிறுத்தவும்.
4. ரிப்பனுடைய Layout tab டேப்பினைத் திறக்க வும். மவுஸின் கர்சர் செல்லுக்குள் இருந்தால் தான், இந்த டேப் இருப்பது காட்டப்படும்.
5. அடுத்து Merge குரூப்பில், Split Cells என்ற டூலில் கிளிக் செய்திடவும்.
6. அடுத்து Number of Columns என்ற கண்ட்ரோலைப் பயன்படுத்தி, அந்த செல்லை பத்து செல்களாகப் பிரிக்க வேண்டும் என அமைக்கவும்.
7. அடுத்து ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

வேர்டில் கண்ட்ரோல் கட்டளைகள்

Ctrl+a: டாகுமெண்ட் முழுவதையும் தேர்ந் தெடுக்க.

Ctrl+b: அழுத்தமான (Bold) வடிவில் எழுத்த மைக்க.

Ctrl+c: தேர்ந்தெடுத்ததை, கோப்பினை நகலெடுக்க (Copyp).

Ctrl+d: ஓர் எழுத்தின் (Font) வடிவை மாற்றி அமைக்க.

Ctrl+e: நடுவே டெக்ஸ்ட் அமைக்க.

Ctrl+f:குறிப்பிட்ட சொல் அல்லது டெக்ஸ்ட் அமைந்துள்ள இடத்தைக் கண்டறிந்து, அதன் இடத்தில் வேறு ஒரு சொல் அமைக்க. மீண்டும் தேடலைத் தொடர Alt+Ctrl+y.

Ctrl+g: ஓரிடம் செல்ல.

Ctrl+h: (ஒன்றின் இடத்தில்) மற்றொன்றை அமைத்திட.

Ctrl+i: எழுத்து / சொல்லை சாய்வாக அமைக்க .

Ctrl+j: பத்தி ஒன்றை இருபக்கமும் சீராக, நேராக (Justify) அமைக்க

Microsoft Excel Tips & Tricks எக்ஸெல் டிப்ஸ்...

விரும்பும் எழுத்தினை நிலைப்படுத்த

எக்ஸெல் ஒர்க் ஷீட் ஒன்றில் அப்போது உள்ள எழுத்துவகை உங்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம். அல்லது உங்களுக்குப் பிடித்த வகையினை நீங்கள் மாறாததாக அமைத்திட எண்ணலாம். அல்லது ஆங்கிலம் அல்லாமல் தமிழ் எழுத்துக்களில் அடங்கிய தகவல்கள் கொண்ட பைலை நீங்கள் அடிக்கடி பயன்படுத்தலாம். அப்போது ஒவ்வொரு முறையும், பாண்ட் விண்டோ சென்று தமிழ் எழுத்தினை செட் செய்வது சிக்கலாக இருக்கலாம். இதற்கு ஒரே வழி நீங்கள் விரும்பும் எழுத்து வகையினை நிலைத்த எழுத்தாக அமைப்பதுதான். இதனை செட் செய்திடக் கீழ்க்காணும்படி அமைத்திடுங்கள்.

1. "Tools" மெனு கிளிக் செய்து அதில் "Options" பிரிவைத் தேர்ந்தெடுக்கவும்.
2. இனி கிடைக்கும் "Options" என்னும் பல டேப்கள் அடங்கிய விண்டோவில் "General" என்னும் டேபில் கிளிக் செய்திடவும்.
3. இப்போது கிடைக்கும் விண்டோவில் "Standard font" என்பதற்கு நேர் எதிராக பாண்ட் மற்றும் சைஸ் விண்டோ இருக்கும். இதில் நீங்கள் விரும்பும் எழுத்துவகையினைத் தேர்ந்தெடுத்து மற்றும் அதற்கான அளவினையும் தேர்ந்தெடுத்து பின் ஓகே கிளிக் செய்து விண்டோக்களை மூடவும். இனி எப்போது எக்ஸெல் ஒர்க் ஷீட்டைத் திறந்தாலும் காலி இடத்தில் இந்த பாண்ட் தான் பயன்பாட்டிற்குத் தயாராக இருக்கும்.

பல ஒர்க்புக்குகளை உடன் மூடிட

எக்ஸெல் புரோகிராமில் செயலாற்றுகையில், ஒர்க்புக் ஒன்றினை மூடுவதற்குப் பல வழிகளை நாம் பின்பற்றுகிறோம். ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட ஒர்க் புக்குகளை மூடுவதற்கு என்ன செய்கிறோம்? ஒவ்வொன்றாகத்தான் மூடுகிறோம். இதற்கு ஒரு சுருக்கு வழியினை எக்ஸெல் கொண்டுள்ளது. அது வெளிப்படையாகத் தெரியாததால், நாம் அதனை அறியாமல் இருக்கிறோம். பல ஒர்க்புக்குகளை, ஒரே கீ அழுத்தத்தில் மூட, ஷிப்ட் கீ அழுத்திக் கொண்டு பைல் மெனுவினைத் திறக்கவும். இப்போது Close என்பது Close All எனக் காட்டப்படும். இதனைத் தேர்ந்தெடுத்து கிளிக் செய்தால், அனைத்து ஒர்க் புக்குகளும் மூடப்படும். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். ஷிப்ட் கீ அழுத்திக் கொண்டு பைல் மெனு திறந்தால் தான், Close All என்பது காட்டப்படும். இல்லையேல் அது காட்சி அளிக்காது.

ஒர்க் ஷீட்டின் இறுதி வரிசை

எக்ஸெல் தொகுப்பில் Ctrl+End அழுத்துகையில், எக்ஸெல், ஒர்க்ஷீட்டின் கீழாக டேட்டா அமைக்கப்பட்டுள்ள செல்லுக்கு, உங்களை அழைத்துச் செல்லும். இது கீழ் வரிசையில் குறுக்கு வலது நெட்டு வரிசை எனச் சொல்லப்படும். நீங்கள் சில படுக்கை வரிசைகள் அல்லது நெட்டு வரிசைகளை, ஒர்க் ஷீட்டில் நீக்கினால், Ctrl+End கீகள் உங்களை நீக்கியவற்றிற்கு முன்பாகக் கீழாக டேட்டா அமைந்துள்ள வலது ஓர செல்லுக்கு எடுத்துச் செல்லும் என்று தானே எதிர் பார்ப்பீர்கள். அதுதான் இல்லை. ஏற்கனவே ஒரிஜினலாக, இறுதியாக எந்த செல்லுக்குச் சென்றதோ, அந்த செல்லுக்குத் தான் செல்லும்.

எடுத்துக் காட்டாக, நீங்கள் அமைத்த ஒர்க் ஷீட் ஒன்றில் H20 செல் கீழாக, இறுதியான தாக இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதில் நீங்கள் மூன்று படுக்கை வரிசைகளையும், ஒரு நெட்டு வரிசையினையும் இடையே நீக்குகிறீர்கள்.

இப்போது Ctrl+End கீகளை அழுத்தினால், கர்சர் G17 செல்லுக்குத்தானே செல்லும் என்று எதிர்பார்க்கிறீர்கள். இல்லை. அதற்குப் பதிலாக H20 என்ற செல்லுக்கே செல்லும். இதற்குக் காரணம் என்னவென்றால், நீங்கள் ஏற்படுத்திய மாற்றம், பைலில் பதியப்படாததே ஆகும். எனவே, மாற்றத்திற்கேற்ற வகையில் இறுதி செல் காட்டப்பட வேண்டும் என்றால், பைலை சேவ் செய்தால் போதும். மாற்றத்தின் அடிப்படையில் கடைசி செல்லைக் காட்டும்.

திருநெல்வேலியில் 4ஜி வசதி அறிமுகம்

ஏர்டெல் நிறுவனம், இந்தியாவில் தொடர்ந்து பல நகரங்களில் 4ஜி எல்.டி.இ. (4G LTE) சேவையை வழங்கி வருகிறது. சென்ற ஆகஸ்ட் மாதம், இந்தியாவில் 296 நகரங்களில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை, புதுச்சேரி, வேலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் நகரங்களில் ஏற்கனவே 4ஜி சேவை அறிமுகமானது. தற்போது திருநெல்வேலியில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மொபைல் போன், இணையக் குச்சி (Dongle), 4ஜி ஹாட் ஸ்பாட் மற்றும் வை பி ஹாட் ஸ்பாட் ஆகியவற்றின் மூலம், இந்த சேவை வழங்கப்படுகிறது. ஏற்கனவே ஏர்டெல் வாடிக்கையாளர்களாக இருப்பவர்கள், 3ஜி யிலிருந்து 4ஜிக்கு மாறிக் கொள்ள கட்டணம் எதுவும் ஏர்டெல் நிறுவனம் வசூலிப்பதில்லை என்ற சலுகையை வழங்குகிறது. ஆறு மாத காலத்திற்கு அளவற்ற இசை கோப்புகளை தரவிறக்கம் செய்து கொள்ளலாம். மாதந்தோறும் ஐந்து திரைப் படங்களை இலவசமாக இறக்கிக் கொள்ளலாம்.

”உலகத் தரத்திலான 4ஜி சேவையினை வழங்க ஏர்டெல் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது” என்று இந்த சேவையை அறிமுகம் செய்திடுகையில், ஏர்டெல் தலைமை நிர்வாக அதிகாரி ஜார்ஜ் தெரிவித்தார்.

இந்தியாவைப் பொறுத்தவரை, வரும் 2018 ஆம் ஆண்டில் 9 கோடி பேர் 4ஜி சேவையைப் பெற்று இயங்குவார்கள் என்று ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. அப்போது 18 கோடி 4ஜி ஸ்மார்ட் போன்கள் புழக்கத்தில் இருக்கும். தற்போது, 2015 இறுதியில், 4ஜி ஸ்மார்ட்போன்களின் எண்ணிக்கை 50 லட்சமாக உள்ளது. 4ஜி சேவைக் கட்டணம் படிப்படியாக உயரும் என்றும், 4ஜி ஸ்மார்ட் போன்களின் விலை குறையும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. கடந்த ஓராண்டாகவே, 4ஜி ஸ்மார்ட் போன்கள் இந்தியாவில் அதிகம் விற்பனையாகி வருகின்றன. மேலும், 3ஜி மற்றும் 4ஜி ஸ்மார்ட் போன்களுக்கிடையேயான விலை வேறுபாடும் அவ்வளவாக இல்லை. புதிதாக அறிமுகமாகும் பெரும்பாலான ஸ்மார்ட் போன்கள் 4ஜி அலைவரிசையில் இயங்குபவையாகவே வடிவமைக்கப்பட்டு கிடைக்கின்றன. பயனாளர்களும், தாங்கள் 4ஜி சேவையின் சந்தாதாரர்களாக இல்லாத போதும், 4ஜி திறன் கொண்ட போன்களையே வாங்கி வருகின்றனர்.

சாம்சங் கேலக்ஸி ஜே 3

அண்மையில், சாம்சங் நிறுவனம் தான் விரைவில் வெளியிட இருக்கும், சாம்சங் கேலக்ஸி ஜே 3 ஸ்மார்ட் போன் குறித்து அதிகாரப் பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது. முதலில் இதனை சீனாவில் வெளியிட்டுள்ளது. Galaxy J3 (SM-J3109Z) என அழைக்கப்படும் இந்த ஸ்மார்ட் போனில், 5 அங்குல அளவிலான ஹை டெபனிஷன் Super AMOLED display திரை உள்ளது. இதன் பிக்ஸெல் திறன் 1280 x 720 பிக்ஸெல்கள்.

சென்ற, செப்டம்பரில், இந்தியாவில் அறிமுகமான, கேலக்ஸி ஜே 2 ஸ்மார்ட் போனில், 4.7 அங்குல அளவில் திரை இருந்தது. இதன் மற்ற சிறப்பம்சங்கள். 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் குவாட் கோர் ப்ராசசர் தரப்பட்டுள்ளது. இதன் ராம் மெமரி 1.5 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி 8 ஜி.பி. இதனை மைக்ரோ எஸ்.டி. கார்ட் கொண்டு 128 ஜி.பி. வரை உயர்த்திக் கொள்ளலாம். இதன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஆண்ட்ராய்ட் 5.1. லாலிபாப். இதன் பின்புறக் கேமரா, ஆட்டோ போகஸ் மற்றும் எல்.இ.டி.ப்ளாஷ் கொண்டு, 8 எம்.பி. திறன் கொண்டதாக உள்ளது. முன்புற செல்பி கேமரா 5 எம்.பி.திறன் கொண்டதாக உள்ளது. இதன் பரிமாணம் 142.3 x 71x 7.9 மிமீ. எடை 138 கிராம். எப்.எம். ரேடியோ மற்றும் 3.5 மிமீ ஆடியோ ஜாக் தரப்பட்டுள்ளது. நெட்வொர்க் இணைப்பிற்கு 4ஜி, 3ஜி, வை பி, புளூடூத் 4.1 மற்றும் ஜி.பி.எஸ். ஆகிய தொழில் நுட்பங்கள் செயல்படுகின்றன. இதன் பேட்டரி 2,600 mAh திறன் கொண்டதாக உள்ளது. வெள்ளை, கறுப்பு மற்றும் தங்க வண்ணங்களில் இது கிடைக்கும். இந்தியாவில் இது அறிமுகமாகும் நாள் மற்றும் விலை குறித்து எந்த தகவலும் இதுவரை தரப்படவில்லை.



மைக்ரோமேக்ஸ் கேன்வாஸ் 5

தான் ஏற்கனவே அறிவித்தபடி, மைக்ரோமேக்ஸ் நிறுவனம் தன் கேன்வாஸ் வரிசையில், Canvas 5 ஸ்மார்ட் போனை அண்மையில் விற்பனைக்கு வெளியிட்டுள்ளது. இதில் வளைவு நுனிகளைக் கொண்ட 5.2 அங்குல திரை, 1920 x 1080 பிக்ஸெல் திறன் கொண்டதாகத் தரப்பட்டுள்ளது. இதற்கு கார்னிங் கொரில்லா கிளாஸ் 3 பாதுகாப்பு உள்ளது. 1.3 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில், 64 பிட் அளவில் இயங்கும் Octa-Core MediaTek MT6753 ப்ராசசர் இதில் இணைக்கப்பட்டுள்ளது. இதன் ஆப்ப ரேட்டிங் சிஸ்டம் ஆண்ட்ராய்ட் 5.1. லாலிபாப். இதனை, ஆண்ட்ராய்ட் 6.0 மார்ஷ்மாலோ சிஸ்டத்திற்கு மேம்படுத்திக் கொள்ளலாம். இதன் ராம் மெமரி 3 ஜி.பி. அளவில், DDR3 வகையினதாகத் தரப்பட்டுள்ளது. ஸ்டோரேஜ் மெமரி 16 ஜி.பி. இதனை மைக்ரோ எஸ்.டி. கார்ட் மூலம் 64 ஜி.பி. வரை உயர்த்திக் கொள்ளலாம்.

இதன் பரிமாணம் 148 x 73.6 x 8.5 மிமீ. எடை 143 கிராம். நெட்வொர்க் இணைப்பிற்கு 4ஜி, 3ஜி, புளூடூத் 4.0 மற்றும் ஜி.பி.எஸ். தொழில் நுட்பங்கள் இயங்குகின்றன.

இதன் பின்புறக் கேமரா, எல்.இ.டி. ப்ளாஷ் வசதியுடன், முகமறிந்து இயங்கும் நுட்பத்துடன், 13 எம்.பி. திறன் கொண்டதாக உள்ளது. 0.2 விநாடியில் போகஸ் செய்து கொள்ளும் வகையில், ஆட்டோ போகஸ் தொழில் நுட்பம் இணைந்துள்ளது. முன்புறக் கேமரா 5 எம்.பி. திறன் கொண்டது. குறைவான வெளிச்சத்தில் கூட, தெளிவான படங்களை எடுக்கும் வகையில், ப்ளாஷ் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு சிம்களை (4ஜி+2ஜி) இயக்கலாம். இந்தியாவில், 4ஜி மற்றும் 3ஜி அலை வரிசைகளில் இதனை இயக்கலாம் என்று மைக்ரோமேக்ஸ் அறிவித்துள்ளது. இதன் பேட்டரி, 2,900 mAh திறனுடையது. தொடர்ந்து 10 மணி நேரம் பேசும் வசதியைத் தருகிறது. ஒரு முறை சார்ஜ் செய்தால், 275 மணி நேரம் மின் சக்தியைத் தக்கவைக்கிறது.

இரு வண்ணங்களில் கிடைக்கும் இந்த ஸ்மார்ட் போனின் அதிக பட்ச விலை ரூ.11,999. ஏர்செல் நிறுவனம் இதனைத் தன்னிடம் வாங்குவோருக்குச் சில சலுகைகளை அளிக்கிறது.

ஸென் எக்ஸ் 16

ரூ. 1,000க்கும் குறைந்த விலையில், மொபைல் போன் வாங்கிப் பயன்படுத்த திட்டமிடுவோருக்கு, ஸென் நிறுவனம், சென்ற மாதம் ஒரு போனை ரூ.825 என்ற விலையில், விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் இரண்டு மினி ஜி.எஸ்.எம். சிம்களைப் பயன்படுத்தலாம். எழுத்துகளும் எண்களும் கொண்ட கீ போர்ட் தரப்பட்டுள்ளது. பார் டைப் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. டி.எப்.டி. வகை ஸ்கிரீன் உள்ளது. எப்.எம். ரேடியோ, லவுட் ஸ்பீக்கர், 3.5 மிமீ ஆடியோ ஜாக், புளூடூத் ஆகியன தரப்பட்டுள்ளன. பின்புறக் கேமரா 1.3 எம்.பி. திறன் கொண்டது. இதில் வீடியோவும் பதியலாம். இதன் பேட்டரி 1000 mAh திறன் கொண்டது.

பெர்சனல் பிரேக்

விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம் என்பது ஒரு நிறுவனம் திடீரென உருவாக்கி நமக்குத் தந்தது அல்ல. அதனைத் தொடர்ந்து செம்மைப் படுத்த, மைக்ரோசாப்ட் எந்த அளவிற்கு உழைத்துள்ளது என்பதை, தங்களின் விண்டோஸ் குறித்த கட்டுரை மிக அருமையாக விளக்கி உள்ளது. குறிப்பாக ஒவ்வொரு விண்டோஸ் பதிப்பு குறித்தும் அப்போதிருந்த படங்களை அந்த அந்த இடத்தில் காட்டியது மிக அருமை. நேர்த்தியாக அனைத்தையும் தர வேண்டும் என்ற உங்களின் ஆர்வமும் மகிழ்ச்சி அளிக்கிறது. நன்றி. பாராட்டுகள்.

எல். டேனியல் சுகுமார், நாகர்கோவில்.

எப்படிப்பட்ட நிலைகளை எல்லாம், விண்டோஸ் சமாளித்து உருவாகி உள்ளது என்பதை அறிகையில், பில் கேட்ஸ் என்ற அந்த மாமனிதரை எண்ணி எண்ணி வியக்க வேண்டியதுள்ளது. எதனையோ கொடுத்து விட்டு, "இதுதான் போ" என்றில்லாமல், நம் வாழ்க்கையின் அனைத்து பிரிவுகளிலும் வசதிகளைத் தர பாடுபட்ட அவர் நிறுவனத்தினரும், அவரும், மனித குல சரித்திரத்தில் இடம் பெற்றவர்கள் ஆவார்கள்.

எஸ். ஜூலியஸ் கிறிஸ்டோபர், சென்னை.

"இனிமேல் எல்லாமே இணையம்தான்" என்ற நிலை நிச்சயம் உருவாகத்தான் போகிறது. எந்த இடத்திலிருந்தும் எதனையும் இயக்கும் வகையில், இணையம் நம்மைப் பிணைக்க உள்ளது. இது குறித்து மிகச் சுருக்கமாக எழுதி உள்ளது எனக்குப் பிடிக்க வில்லை. பெரிய கட்டுரையாக இது குறித்து தரவும்.

கே.எம். ராமச்சந்திரன், கும்பகோணம்.

4கே திரை குறித்த அருமையான தகவல்களுக்கு நன்றி. சோனி தர இருக்கும் அந்த திறன் படைத்த காட்சியைப் பார்க்க விரும்புகிறேன். இது போன்ற தகவல்களை முந்தித் தரும் கம்ப்யூட்டர் மலர் ஆசிரியர் குழுவினருக்கு நன்றி.

சேவியர் பிரகாஷ், மதுரை.

லூன் திட்டம் இந்தியாவில் இயக்கத்திற்கு வந்தால், இன்னும் இணைய இணைப்பிற்கான அடிப்படை தேவைகளைக் கூட அறியாத கிராம மக்களுக்கு இணையத்தின் வசதிகள் கிடைக்கும். ஆனால், நம் அரசு மெத்தனமாக இல்லாமல், தொலைதூரக் கிராம மக்களுக்கு இணையத்தின் நன்மைகளை எடுத்துச் சொல்லித் தயார் படுத்த வேண்டும்.

கா.தமிழ்ச் செல்வன், தஞ்சாவூர்.

நல்லது மேற்கொள்ள எந்த முயற்சி எடுத்தாலும், அதில் சில சில்மிஷங்களும் அமையும். அது போலத்தான், இணையத்தில் வதந்திகளும். நம்மில் பலர் இன்னும் உருப்படியான வேலை இல்லாமல் இருக்கிறோம் என்பதையே இந்தியா இணையம் வழி வதந்தி பரப்புவதில் முதலிடம் என்ற தகவல் காட்டுகிறது. ஆனால், இணையம் இருக்கும் வரையில், வதந்திகள் சோப்பு குமிழ்களாகத்தான் இருக்கும்.

எஸ்.ஆர். பூமிநாதன், திருச்சி.

கம்ப்யூட்டரை நாம் இயக்காத போது, ஹார்ட் டிஸ்க் இத்தனை வேலைகள் செய்கிறதா என்ற வகையில் அருமையான தகவல்களைத் தந்துள்ளீர்கள். ஹார்ட் டிஸ்க் குறித்த கட்டுரை நல்ல பாடக் கட்டுரையாகும். கம்ப்யூட்டர் எவ்வளவு திறமையான சாதனம் என்று நம்மால் உணர இந்தக் கட்டுரை உதவுகிறது.

கே.எஸ். பால்ராஜ் சேவியர், காரைக்கால்.

ஆப்பிள் வருமானம் உயர்வதில் ஆச்சரியமே இல்லை. அதனுடைய லாப விகிதம் அவ்வளவு அதிகமானது. அதே போல, தனக்கென ஒரு வழியைக் கொண்டு, தன் வாடிக்கையாளர்கள் அனைவரையும் கட்டிப் போட்டு வைத்திருப்பது அதன் அருமையான வர்த்தக தந்திரமாகும். செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில், அதன் பயனாளர்கள் வேறு ஒரு சாதனத்திற்கு மாறாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

என். புருஷோத்தமன், ஸ்மிர்னா, அட்லாண்டா.

கேள்வி – பதில்

–டாக்டர் பெ. சந்திர போஸ் –

கேள்வி: நான் ஒன் ட்ரைவில் 15 ஜி.பி. அளவு இடம் தருவதனால், என்னுடைய தனிப்பட்ட மற்றும் அலுவலகப் பணிகள் சார்ந்த பல பைல்களை அதில் பதிந்து வைத்து சேமித்துள்ளேன். இந்த அளவினை 5 ஜி.பி. ஆகக் குறைத்துள்ளதாக, உங்கள் கம்ப்யூட்டர் மலரில் செய்தி வெளியிட்டுள்ளீர்கள். 5 ஜி.பி.க்கும் மேலாக பைல்கள் இடத்தைக் கொண்டிருந்தால் என்ன செய்திட வேண்டும்? கட்டணம் செலுத்த வேண்டுமா?

என். ஜெயமுருகன், கோவை.

பதில்: இது போல பல வாசகர்கள், குறிப்பாக அலுவலக நிர்வாகத்தில் உள்ளவர்கள் கடிதங்களை அனுப்பியுள்ளனர். அனைவருக்குமாக, மைக்ரோசாப்ட் நிறுவனம் வெளியிட்ட ஒன் ட்ரைவ் குறித்த மாற்றங்களைச் சுருக்கமாகத் தருகிறேன். மைக்ரோசாப்ட் அறிவித்த மாற்றங்கள்,

2016 ஆம் ஆண்டு தொடக்கத்தில் குறிப்பிட்ட தேதியில் அமலுக்கு வரும். நீங்கள் இலவச 15 ஜி.பி. திட்டத்தில், 5 ஜி.பி.க்கும் அதிகமான அளவில் பைல்களை ஒன் ட்ரைவில் பதிந்து வைத்திருந்தால், அனைத்து பைல்களையும் மேலும் ஓர் ஆண்டு வரை பெறலாம். ஆனால், மேலும் கூடுதலாகப் பதிய முடியாது. இந்தக் கால கெடுவிற்குள், அளவு மீறும் பைல்களை அல்லது கூடுதலானவற்றை வேறு ஒரு பயனாளராக அதில் அக்கவுண்ட் திறந்து பதிந்து வைக்கலாம். அல்லது வேறு ஒரு மீடியாவிற்கு மாற்றிக் கொள்ளலாம். கட்டணம் செலுத்திப் பெறும் 100 மற்றும் 200 ஜி.பி. திட்டங்கள் வாபஸ் செய்யப்படுகின்றன. இதற்குப் பதிலாக, மாதந்தோறும் 1.99 டாலர் செலுத்தி, 50 ஜி.பி. இடம் பெறும் வகையிலான திட்டம், வரும் 2016 தொடக்கத்திலிருந்து அமலுக்கு வருகிறது.

கேள்வி: விண்டோஸ் 7 மற்றும் 8.1 சிஸ்டம் பதிக்கப்பட்ட கம்ப்யூட்டர்கள், வரும் அக்டோபர் 31, 2016க்குப் பின்னர் கிடைக்காது. உரிமங்கள் வழங்கப்பட மாட்டாது என மைக்ரோசாப்ட் அறிவித்துள்ளது. அப்படியானால், விண்டோஸ் 10 சிஸ்டமும் இதே போல், ஒரு நாள் நிறுத்தப்படுமா? என்று என மைக்ரோசாப்ட் அறிவித்துள்ளதா?

எஸ். பிரகாஷ் மோகன், சென்னை.

பதில்: விண்டோஸ் 10 ஆப்பரேட்டிங் சிஸ்டத்தினைப் பல வழிகளில், வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்க மைக்ரோசாப்ட் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்த கேள்வி அவசியம் தானா? என்று வரை விண்டோஸ் 10 சிஸ்டத்துடன், நிறுவனங்கள் கம்ப்யூட்டர்களை விற்பனை செய்திடலாம் என்று, மைக்ரோசாப்ட் அறிவிக்கவில்லை. தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு அப்கிரேட் செய்திடும் வகையில் தான், விண்டோஸ் 10 தற்போது கிடைத்து வருகிறது. ஒன்றைக் கவனித்தீர்களா? விண்டோஸ் 8க்கான உரிமம் வழங்குவது, ஜூன் 30, 2016 அன்று நிறுத்தப்படும். விண்டோஸ் 7க்கான உரிமம் அக்டோபர் 31 வரை வழங்கப்படும்.

கேள்வி: கம்ப்யூட்டர் பயன்பாட்டில் இருக்கும்போது, அதன் சி.பி.யு. டவரைச் சற்று நகர்த்தலாமா? என் அலுவலகத்தில், நண்பர் இவ்வாறு நகர்த்துகிறார். இது சரியல்ல என்று சொன்னால், எல்லாமே அசைக்க முடியாதபடி, ஸ்குரூக்களால் இறுக அமைக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார். தங்களின் கருத்தறிய ஆவல். அதனை, அலுவலகத்தில் அனைவருக்கும் தெரிவிக்கப் போகிறேன்.

என். ஸ்ரீராமன், சென்னை.

பதில்: என் கருத்து மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நன்றி. கம்ப்யூட்டர் இயங்கும் போது, சி.பி.யு. டவரை நகர்த்துவது தவறு, தவறு, சரியல்ல. இதற்கான காரணத்தைப்



பார்ப்போமா! சி.பி.யு. டவரில் உள்ள ஹார்ட் ட்ரைவ், கம்ப்யூட்டர் இயங்கும்போது, உள்ளுக் குள்ளாகச் சுழன்று கொண்டிருக்கும். காற்று, தூசு புகாதபடி அது அமைக்கப்பட்டு, இறுக்க மான நிலையில் அமைக்கப்பட்டிருந்தாலும், நம்முடைய நகர்த்தல் அதனைப் பாதிக்கும். ஏனென்றால், உள்ளாக, சுழலும் டேட்டா டிஸ்க்குகள், நிமிடத்திற்குக் குறைந்தது 5,000 முறைக்கு மேல் சுழன்று கொண்டிருக்கும். இதன் மீது டேட்டா எழுதும் கரமானது எழுது வதற்குக் காத்துக் கொண்டிருக்கும். ப்ராசசரின் ஆணைப்படி, அவ்வப்போது எழுதிக் கொண் டிருக்கும். எனவே, நாமாக ஏற்படுத்தும் அசை வுகள், டேட்டா எழுதும் கரத்தினை, டிஸ்க்கில் தேவையற்ற இடத்தில் மோதலை ஏற்படுத்தி, டிஸ்க்கைக் கெடுத்துவிடும். அதில் உள்ள டேட் டாவினை நாம் மீண்டும் பெற முடியாது. இது போன்ற எதிர்பாராத விளைவுகளைத் தடுக்கும் வகையில், எழுதும் கரத்தினை இயக்கும் தொழில் நுட்பம் தற்போது கிடைக்கிறது. இருப் பினும் அது 100% பாதுகாப்பினைத் தரும் என்று உறுதி கூற இயலாது. எனவே, டெக்ஸ்டாப் மட் டுமல்ல, லேப்டாப் கம்ப்யூட்டர், போர்ட்டபிள் ஹார்ட் ட்ரைவினைக் கூட, அது இயங்கும் போது நகர்த்துவது நல்லதல்ல.

கேள்வி: வேர்டில் தயாரிக்கப்படும் டாகுமெண்ட்கள், ஒரு பக்கத்தில் எவ்வளவு இடம் பிடிக்கும் என்பதை எப்படிச் சரியாகக் கணிப்பது. குறிப்பாக, ஏ4 அள விலான ஒரு தாளில் டாகுமெண்ட் பக்கம் எப்படி அமையும் என்பதனை, எந்த செட்டிங்ஸ் மூலம் நாம் அறிய முடியும்?

எம். ஜெயசுதா, திருப்பரங்குன்றம்.

பதில்: அதாவது, டாகுமெண்ட் டெக்ஸ்ட் ஒரு பக்கத்தில் எடுத்துக் கொள்ளும் இடம் எவ்வளவு எனத் தெரிந்து கொண்டு, பிரிண்ட் எடுக்க நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதுதான் உங்கள் கேள்வி எனப் புரிந்து கொண்டு, இந்த



பதிலை அளிக்கிறேன். டாகுமெண்ட்டினைத் திறந்து Print Layoutல் அதனைக் காணவும். இப்போது காட்டப்படும் காட்சியில், நீங்கள் தயார் செய்த டெக்ஸ்ட்டைச் சுற்றிலும், புள் ளிகள் அமைந்த கோடு காணப்படும். இதனைப் பார்த்து பயப்பட வேண்டாம். அச்சிடுகையில் இந்த கோடு காட்டப்பட மாட்டாது. ஆனால், நீங்கள் விரும்பும் வகையில், டாகுமெண்ட் டெக்ஸ்ட் எந்த அளவில் தாளில் இடம் எடுத்துக் கொள்ளும் என்று காட்டும். இந்தக் காட்சி காட் டப்படுவதனை ஒரு செட்டிங்ஸ் மூலம் நாம் அமைக்கலாம். கீழே குறிப்பிட்டுள்ளபடி செயல் படவும்.

1. Word Options டயலாக் பாக்ஸை முதலில் பெறவும். வேர்ட் 2007ல், ஆபீஸ் பட்டன் கிளிக் செய்து, கீழாக உள்ள Word Options பட் டனை கிளிக் செய்திட வேண்டும்.
2. இந்த டயலாக் பாக்ஸின் இடது பக்கம் உள்ள Advanced என்பதில் கிளிக் செய்திடவும்.
3. இங்கு கிடைக்கும் ஆப்ஷன்ஸ் பட்டியலில் மவுஸை உருட்டிக் கொண்டு செல்லவும். Show Document Content என்ற பிரிவில் நிறுத் தவும்.
4. Show Text Boundaries என்ற செக் பாக்ஸில் டிக் அடையாளம் ஏற்படுத்தினால், டெக்ஸ்ட் எல்லைக் கோடு காட்டப்படும். எடுத்து விட்டால் காட்டப்பட மாட்டாது. தேவை யானதை ஏற்படுத்திய பின்னர், ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

கேள்வி: வேர்ட் டாகுமெண்ட்டில் பீல்டுகளை உரு வாக்கி, அவ்வப்போது அவை அப்டேட் செய்யப்

படும் டிப்ஸ் நீங்கள் சில மாதங்களுக்கு முன்னர் தந்தீர்கள். அதனைப் பின்பற்றி, இப்போது என் தேவைகளுக்கென, பல பீல்டுகளை உருவாக்கிப் பயன்படுத்தி வருகிறேன். ஆனால், சில வேளைகளில், குறிப்பிட்ட பீல்டுகள், அப்டேட் ஆகாமல் இருந்தால் நல்லது என்ற நிலை வருகிறது. குறிப்பிட்ட சில பீல்டுகளை மட்டும், ஒரு டாகுமெண்ட்டில், அப்டேட் ஆகாமல் இருக்கும்படி செய்திட முடியுமா? தயவு செய்து டிப்ஸ் வழங்கவும்.

என். பீர் முகமது, புதுச்சேரி.

பதில்: நல்ல கேள்வி. பீல்டுகளை அமைத்து, அவற்றில் இணைக்கப்பட்டுள்ள டேட்டாவினை அப்டேட் செய்வது நல்ல செயல்பாடு. ஆனால், நீங்கள் கேட்கும்படி, சில பீல்டுகளில் அப்டேட் செய்திடாமல், அவற்றை மாற்றி அமைப்பது குறித்து நான் சிந்திக்கவில்லை. எனவே, கேள்விக்கு நன்றி. இந்த நோக்கத்துடன், எம்.எஸ். ஆபீஸ் உதவிப் பக்கங்களில் தேடி விடை கண்டுபிடித்தேன். கீழே அதற்கான அமைப்பினைத் தருகிறேன்.

1. எந்த பீல்ட் மேம்படுத்தப்பட வேண்டாம் என முடிவு செய்கிறீர்களோ, அதனைத் தேர்ந்தெடுக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட பீல்டுகளையும் தேர்ந்தெடுக்கலாம்.
2. பீல்டுகளை அப்டேட் செய்திட விரும்பினால், Shift+F9 கீகளை அழுத்தவும்.
3. தொடர்ந்து, Ctrl+F11 என்ற கீகளை அழுத்தினால், அந்த பீல்டுகளின் டேட்டா, மேம்படுத்தப்பட மாட்டாது.
4. ஏதேனும் ஒரு நாளில், நீங்கள் போட்டிருக்கும் இந்த தடையை நீக்கி, அவை மேம்படுத்தப்பட வேண்டும் என விரும்பினால், கீழே தந்துள்ளபடி செயல்படவும். எந்த பீல்டுகளின் தடையை நீக்க வேண்டுமோ, அவற்றைத் தேர்ந்தெடுக்கவும். தொடர்ந்து, Ctrl+Shift+F11 என்ற கீகளை அழுத்தவும்.

கேள்வி: என்னுடைய டாகுமெண்ட்களில், அன்றைய தேதியை, தானாக கம்ப்யூட்டர் அமைக்கும் வகையில் எப்படி செட்டிங்ஸ் அமைக்க வேண்டும்? என் கம்ப்யூட்டரில் விண்டோஸ் 7 சிஸ்டத்தில், எம்.எஸ். ஆபீஸ் 2007 இயக்கி வருகிறேன்.

என். சுஜாதா, சேலம்.

பதில்: நீங்கள் டாகுமெண்ட் என்று குறிப்பிட்டதனால், வேர்ட் டாகுமெண்ட் என்று எடுத்துக் கொண்டு, கீழே அதற்கான குறிப்புகளைத் தருகிறேன். அதிர்ஷ்டவசமாக, இதற்கு மிக எளிய வழி ஒன்று உள்ளது. ஒவ்வொரு முறை நீங்கள் வேர்ட் டாகுமெண்ட்டினைத்



திறக்கையில், அது அன்றைய தேதியை, குறிப்பிட்ட இடத்தில் அமைத்துவிடும். முதலில், உங்கள் டாகுமெண்ட்டினைத் திறக்கவும். எங்கு அன்றைய தேதி அமைக்கப்பட வேண்டுமோ, அந்த இடத்தில் கர்சரை நிறுத்தவும். இதன் பின், ரிப்பனில், INSERT டேப்பில் கிளிக் செய்திடவும். பின்னர், டெக்ஸ்ட் (Text) குரூப்பில், Quick Parts என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு Field என்பதில் கிளிக் செய்திடுக. அடுத்து Categories பகுதியில் Date and Time என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து Field names என்ற பெட்டியில் CreateDate, PrintDate, or SaveDate என்பதில் கிளிக் செய்திடவும். Date formats பாக்ஸில், நீங்கள் விரும்பும் வகையிலான தேதி பார்மட்டினைத் தேர்ந்தெடுக்கவும். இனி, அனைத்து பாக்ஸ்களையும் மூடவும். குறிப்பிட்ட இடத்தில், தேர்ந்தெடுத்த வடிவில், அன்றைய தேதியும் நேரமும் காட்டப்படும்.

உங்களுக்கு போனஸாக ஒரு டிப்ஸ் தரட்டுமா? எக்ஸெல் ஒர்க் ஷீட்டிலும் இதே போல அன்றைய தேதியை அமைக்க, எந்த செல்லில் அதனை அமைக்க வேண்டுமோ, அதில் =TODAY() என்ற பார்முலாவினை அமைக்கவும். எப்பொழுது நீங்கள் அந்த ஒர்க் ஷீட்டினைத் திறக்கிறீர்களோ, அந்த செல்லில், அன்றைய தேதி அமைக்கப்படும்.

கேள்வி–பதில்